1.0 அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2021, ஒற்றோபர் மாதம் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அதற்கான விண்ணப்பம் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk என இணையத்தளத்தில் "Our services" என்பதன் கீழுள்ள "Online Application - Recruitment Exams" என்பதில் வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்கள் இணைய வழியில் (Online) மாத்திரம் சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பம் இணைய வழியினூடாக அனுப்பப்பட்டதும் அது பதிவிறக்கம் செய்யப்பட்டு, அதன் அச்சுப் பிரதியின் தொடர்புடைய பிரிவுகள் கையெழுத்தினால் நிரப்பப்பட்டு, விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டு, ஏற்புடையதாயின் நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்துகையுடன் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரியை அடையக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். (விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை தங்களுடன் வைத்திருத்தல் பயனுடையதாகும்). கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.08.03 ஆகும். இப்பரீட்சை 2021, ஒற்றோபர் மாதம் நடத்தப்படும். பரீட்சை நடத்தப்படும் இடங்கள் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். (பரீட்சை, அட்டவணை - II இல் குறிப்பிடப்பட்ட நகரங்களில் அமைந்துள்ள பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடைபெறும். பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் நகரம் அட்டவணையின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்டு தெரிவு செய்யப்படும் நகரம் மற்றும் அந்த நகரத்துக்குரிய இலக்கம் அட்டவணை - II இற்கமைய சரியாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

***குறிப்பு*** .- விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டியது கட்டாயமானதாகும். அத்துடன் அது தபாலில் காணாமல் போய்விட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்ற முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. இறுதி நாள் வரை விண்ணப்பப் படிவத்தை தாமதப்படுத்துவதால் ஏற்படக்கூடிய நட்டங்களை விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

2.0 (அ) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை அடிப்படையில் தகைமை பெற்றுள்ள பரீட்சார்த்திகள், மாவட்ட மக்கள் தொகையின் விகிதாசார அடிப்படையில் அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த பதவிக்கு நியமிக்கும் போது, தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் தேர்ந்தெடுக்கப்படுவர். இப் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அனைத்து பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர். அவரது தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகளுக்கான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் தனியாக குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஆ) தேர்ந்தெடுக்கப்படுவோர் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்குவரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். மேலும், வெற்றிடங்கள் ஒரு சிலவற்றை அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்பாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3.0 **மொழி மூலம்** .- இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தமது விருப்பின் பிரகாரம் இதில் யாதேனுமொரு மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

4.0 **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நிபந்தனைகள்** .-

(i) அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்துகின்ற பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் இலக்கம் 2053/18 மற்றும் 2018.01.09 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அச்சேவைப் பிரமாணக் குறிப்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட மற்றும் இதன் பின்னர் கொண்டுவரப்படுகின்ற திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கும், இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும், கட்டுப்படும் விதத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பரீட்சார்த்திகள் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

(ii) இந்த நியமனமானது 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்து 03 வருடங்களுக்குள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். அது சேவையில் நிரந்தரமாக்குவதற்கான நிபந்தனையாகும்.

(iii) இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கேற்ப, இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்காக நியமிக்கப்படுவார்கள்.

(iv) இந்நியமனம் வழங்கப்படுகின்ற அலுவலகத்தில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடங்கள் கட்டாயமாக பணியாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படுகின்ற யாதேனுமொரு விசேட காரணத்தின் மீது அக்காலம் முடிவடைவதற்கு முன்னர் எவரேனுமொரு உத்தியோகத்தரை இடமாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்படின் நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உண்டு.

(v) அரசகரும மொழி – அரசகரும மொழியல்லாத மொழியில் சேவைக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் சேவையில் நிரந்தரமாக்குவதற்கு முன்னர் ஒரு அரசகரும மொழியில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இரண்டாவது அரசகரும மொழி – நியமனம் செய்யப்பட்டு மூன்று (03) வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர் பொது நிருவாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதற்கு விளைவாந்தன்மையான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் இரண்டாம் அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(vi) அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களின் சாதாரண கடமை நேரம் வருடத்தின் அனைத்து நாட்களிலும் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 வரையாகும். எனினும், கடமை தேவையின் நிமித்தம் மற்றும் கடமையின் தன்மைக்கேற்ப மேற்படி நேரத்தில் மாற்றம் ஏற்படலாம். மேலும் இரவு நேரக் கடமையில் ஈடுபட வேண்டியமை கட்டாயமானதுடன், கடமையின் தன்மைக்கேற்ப மேலதிக கடமையில் ஈடுபடுத்துவதற்கும் உத்தரவிடப்படலாம்.அவ்வாறே வருடத்தின் முந்நூற்றி அறுபத்தி ஐந்து (365) நாட்களிலும் கடமையாற்றுவதற்கு உட்படுகின்றார்.

(vii) சுகாதார அமைச்சின் செயலாளரினால் நிர்ணயிக்கின்ற கடமைகளை நிறைவேற்றுகின்ற இந்த உத்தியோகத்தர்களினால் ரூபா 5000.00 பெறுமதியான பிணை தொகையொன்றினை வைப்புச் செய்தல் வேண்டும்.

(viii) சேவையின் தேவை நிமித்தம் சுகாதார நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளில் பணிபுரியும் அலுவலர்கள் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் பணியாற்றுமாறு உத்தரவிடப்படலாம். அதற்குப் பதிலாக மேலதிக நேரக் கொடுப்பனவு அல்லது விடுமுறைக்கால கொடுப்பனவு அல்லது பதில் விடுமுறை என்பவற்றில் ஏதாவது ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

5.0 **சம்பளம்** .- இலக்கம் 03/2016 மற்றும் 2016.02.25 ஆந் திகதியுடைய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III, II மற்றும் I ஆம் தரங்களுக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 28,940 – 10 ×300 – 11 × 350 – 10 × 560 – 10 × 660 – ரூபா 47,990 ஆகக் காணப்படும். அச்சம்பள அளவுத் திட்டமானது2020.01.01 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும். சம்பளக் குறியீடு MN-02-2016 ஆகக் காணப்படுவதுடன்,மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமனம் அமுலுக்குவரும் தினத்திலிருந்து சம்பளம் வழங்கப்படும். ரூபா 31,940.00 சம்பள படிநிலையைத் தாண்டிச் செல்வதற்காக தரம் II இற்கான பதவி உயர்வினையும், ரூ.35,790.00 சம்பள படிமுறையைத் தாண்டிச் செல்வதற்காக தரம் I இற்கான பதவி உயர்வினையும், பெற்றுக் கொள்ளல் வேண்டும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற பிற கொடுப்பனவுகளும் உங்களுக்கு உரித்துடையதாகும்.

6.0 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்கின்ற கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும். மேலும் விதவைகள் மற்றும் அனாதைகள் / தபுதாரர்கள் அனாதைகள் ஓய்வூதிய சம்பளத் திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும். இதற்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற முறைக்கேற்ப அதற்கான பங்களிப்புத் தொகையினைச் செலுத்துதல் வேண்டும்.

7.0. இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

7.1. **அடிப்படைத் தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்கின்ற இறுதி தினத்தன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதன்படி 2003.08.03 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னரும் 1991.08.03 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு பின்னரும் பிறந்த பரீட்சார்த்திகள் மாத்திரம் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும்.)

(இ) சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குப் பொருத்தமான உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கிய நிலையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7.2. **கல்வித் தகைமைகள் :**

(1) கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரணத் தரப்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரு தடவையில்ஆறு (06) பாடங்களில சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(2) கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் (சாதாரண பொதுவினாத்தாள் மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். பழைய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

***கவனிக்க*** : சகல விண்ணப்பதாரர்களும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளையும் 2021.08.03 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

8.0 **மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் தேர்ந்தெடுத்தல் :**

(அ) மாவட்ட பெயர் அட்டவணையானது அட்டவணை 1 என குறிப்பிடப்பட்டுள்ளது. வெற்றிடத்திற்காக போட்டியிடுவதற்கு தெரிவு செய்யும் மாவட்டம் மற்றும் அதன் இலக்கத்தை அட்டவணை 1 இன் பிரகாரம் விண்ணப்பப் படிவத்தில் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தலானது கண்டிப்பாக பிரதிநிதித்துவ அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் சனத்தொகையின் விகிதாசாரத்திற்கேற்ப அந்தந்த மாவட்டங்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கையில் உரிய தொகை ஒதுக்கப்படும். யாதேனுமொரு மாவட்டத்தில் நிரப்ப வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போட்டியிடுவதற்கு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தகைமை பெறுவர்.

(i) யாதேனுமொரு மாவட்டத்திற்கு மேலே குறிப்பிட்டவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை அந்த மாவட்டத்திற்காக விண்ணப்பித்து தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களில் இருந்து நிரப்ப முடியாத சந்தர்ப்பங்களில் அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கையை அண்மித்த அனைத்து மாவட்டங்களுக்கு இடையிலும் அந்தந்த மாவட்டத்தின் சனத்தொகை விகிசாரத்திற்கு ஏற்ப மீண்டும் பகிர்ந்தளிக்கப்படும்.

(ii) நிரப்பப்படவுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை சிறியளவாயின், அதன் காரணமாக மாவட்ட சனத்தொகை விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொள்ள முடியாது போகின்றபோது திறமையின் ஒழுங்கு முறைக்கேற்பத் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(iii) பரீட்சையில் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் தொகையானது நிலவும் வெற்றிடங்களை விடவும் குறைவாகக் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது மாவட்ட சனத் தொகை விகிதாசார அடிப்படையில் தெரிவுகள் இடம்பெற மாட்டாது.

(இ) மாவட்டத்திற்கு தகுதி பெறுவதற்கு இருக்க வேண்டிய தகைமைகள்.- மாவட்டம் ஒன்றின் வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதற்கு பின்வரும் விடயங்களில் ஒன்றேனும் இருத்தல் வேண்டும்.

i. விண்ணப்பதாரர் அந்த மாவட்டத்தில் பிறந்த ஒருவராக இருத்தல் வேண்டும்.

அல்லது,

ii. பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதி தினத்திற்கு முந்திய ஐந்து (05) வருடங்களினுள் அவர் அந்த மாவட்டத்தில் மூன்று (03) வருடங்களாவது தொடர்ச்சியாக வசித்து வந்த ஒருவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

iii. அவர் தொடர்ச்சியாக ஐந்து (05) வருடங்கள் அந்த மாவட்டத்தில் தமது இரண்டாம் நிலைக் கல்வியை பெற்றிருத்தல் வேண்டும்.

***குறிப்பு***.- எவரேனுமொரு விண்ணப்பதாரரின் தந்தை அல்லது தாய் அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றிலே இடமாற்றம் செய்யப்படக்கூடியசேவை ஒன்றில் பணியாற்றும் பட்சத்தில், அந்த விண்ணப்பதாரிக்கு தமது தாய் அல்லது தந்தை பிறந்த இடத்தை தமது மாவட்டமாக தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும். (அதற்காக விண்ணப்பதாரரினால் தமது பெற்றோரின் பிறந்த இடம் மற்றும் அவர்கள் அரசாங்க சேவையில் பணியாற்றுவதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்கள் என்பவற்றினை நேர்முகப் பரீட்சையின் போது அல்லது கோரப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பித்தல் வேண்டும்.)

எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையின் போது அல்லது கோரப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்படி மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதனை உறுதிப்படுத்துவதற்கான பின்வரும் ஆவணங்களை தேவையானவாறு சமர்ப்பிப்பதற்கு கடமைப்பட்டுள்ளார்.

(i) பிறப்புச் சான்றிதழ்

(ii) பிரதேசச் செயலாளரினால் இணைக் கையொப்பம் இடப்பட்ட கிராம சேவை உத்தியோகத்தரின் சான்றிதழ் அல்லது 03 வருடங்களுக்குரிய தொடர்ச்சியாக வசிப்பதற்கான பதிவினை உறுதிப்படுத்துவதற்கான வாக்காளர் இடாப்பு.

(iii) பாடசாலை விடுகை சான்றிதழ்

(iv) எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்குரிய வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. தாம் மிகவும் விருப்பமான மாவட்டம் எது என்பதனை விண்ணப்பத்தில் குறிப்பிட்டதன் பின்னர் அதனை மாற்ற முடியாது.

*9.0* ***பரீட்சை நடைமுறை.-***

(அ) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரர் ஒருவர் தமக்குரிய ஒரு மொழியைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பரீட்சைக்குரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் அம்மொழியிலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டுள்ளது.

| | | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| (I) | மொழித் தேர்ச்சி | 100 | 2½ மணித்தியாலம் |
| (II) | உளச்சார்பு | 100 | 1 மணித்தியாலம் |

***மொழித் தேர்ச்சி.-*** இவ்வினாத்தாள் பரீட்சார்த்திகளின் கருத்துத் தெரிவித்தல், கிரகித்தல், எழுத்து வடிவம், மொழி மற்றும் கட்டுரை,கடமை சார்ந்த கடிதம் ஒன்றினை எழுதுதல்,எண் வடிவ அட்டவணையை தயாரித்தல்,தரப்பட்டுள்ள விடயத்தை சுருக்கி எழுதுதல், தரப்பட்டுள்ள பல வாக்கியங்கள் அடங்கிய கருத்தினை தனி வாக்கியத்தில் வெளிப்படுத்துதல், மற்றும் இலகுவான இலக்கண மொழிநடை பற்றிய அறிவு என்பன தொடர்பான அறிவினை பரீட்சிப்பதற்கானவிடயம் தொடர்பான வினாக்களைக்கொண்டிருக்கும்.

***உளச்சார்பு.-*** இவ்வினாத்தாள் பரீட்சார்த்திகளின் எண் கணித திறமை, தர்க்க ஆற்றல், பொது அறிவு என்பவற்றினை அளவிடும் வகையில் தயாரிக்கப்படுகின்ற விடயம் தொடர்பான வினாக்களைக் கொண்டிருக்கும்.

*குறிப்பு.-*

(அ) அலுவலகப் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பரீட்சார்த்திகளின் தகைமைகள் மற்றும் திறமைகள் என்பவற்றினைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாத்தாள்கள் தயாரிக்கப்படும்.

(ஆ) அனைத்து எழுத்து மூல வினாத்தாள்கள் தொடர்பாகவும் தெளிவற்ற கையெழுத்துக்கள் மற்றும் சொற்களின் எழுத்துப் பிழைகள் என்பன தொடர்பாக புள்ளிகள் குறைக்கப்படும்.

(இ) இப்பரீட்சையானது போட்டிப் பரீட்சை ஒன்றாகக் காணப்படுகின்ற போதிலும், நியமனம் பெறுவதற்கான தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஒதுக்கியுள்ள புள்ளிகளில் ஒவ்வொரு வினாத்தாளிலும் நூற்றுக்கு நாற்பது (40%) புள்ளிகளையேனும் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அத்துடன் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் 50% இனை பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஆட்சேர்ப்புச் செய்கின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையினை பூர்த்தி செய்யக்கூடியவாறு பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் ஒழுங்கு முறையினைக் கண்டிப்பாகப் பின்பற்றி நியமனங்கள் வழங்கப்படும்.

(ஈ) ***பரீட்சைப் பெறுபேறுகள்.-*** விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் www.results.exams.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் ஊடாக வெளியிடப்படும்.

*10.0* **போலியான தகவல்களுக்கான தண்டனை.-** விண்ணப்பப் படிவத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம், யாதேனுமொரு விண்ணப்பதாரர் தகைமையற்றவர் என தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் பட்சத்தில் அல்லது பரீட்சை முடிவடைந்ததன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது தகுதியாளர் நிலையினை இரத்துச்செய்ய முடியும். விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பித்த தகவல்களில் ஒன்று எச்சந்தர்ப்பத்திலாவதுபோலியானதெனக் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் எச்சந்தர்ப்பத்திலும் அவரை அரசாங்க சேவையிலிருந்து விலக்குவதற்கு முடியும்.

*11.0* ***பரீட்சைக் கட்டணம் .-***

(அ) பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணங்களை செலுத்தும்போது இணைய வழி முறைமையிலிருந்து வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணங்களைச் செலுத்தும் செயன்முறையின் கீழ் மாத்திரம் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் வேண்டும்.

1. எந்தவொரு வங்கி கடன் அட்டை ஒன்றின் மூலம் (Any Bank Credit Card)
2. இணைய வழியிலான கட்டண கொடுப்பனவு வசதிகள் செயற்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு வங்கி பற்று அட்டை ஒன்றின் மூலம் (Any bank debit Card with internet transaction facilities)

3. இலங்கை வங்கி இணையவழி வங்கி முறைமை (Bank of Ceylon Online Banking System )
4. எந்தவொரு இலங்கை வங்கி கிளை ஒன்றின் மூலம் (Bank of Ceylon Slip Payments)
5. தபால் திணைக்களத்தின் எந்தவொரு தபால் அலுவலகம் ஒன்றின் மூலம் (Postal Department Payment at any Post Office)

***குறிப்பு.***- மேற்குறிப்பிட்ட முறைகள் மூலம் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டிய முறை பற்றிய அறிவுறுத் தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் (Technical Instruction ) கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைத்தது என்பது பற்றி குறுஞ் செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்துக்கான முழுத்தொகையும் செலுத்தப்படுத்துதல் வேண்டும். பரீட்சைக்கட்டணம் குறைவாக அல்லது அதிகமாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படுகின்ற பிழைகள் தொடர்பாக இலங்கை பரீட்சை திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ/வேறு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது.

12.0 **விண்ணப்பித்தல் மற்றும் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய ஒழுங்கு முறை** : இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கிலத்தில் மாத்திரம் நிரப்பப்படல் வேண்டும்.விண்ணப்பதாரர் இணையவழியில் அனுப்பிய மென்பிரதி (soft copy) மற்றும் பதிவுத் தபாலில் அனுப்பிய அச்சுப்பிரதி (Printed copy) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைத்ததும், மென்பிரதியும் அச்சுப் பிரதியும் சரிபார்க்கப்பட்டு செல்லுபடியான விண்ணப்பப் படிவம் என திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது முறைமையில் (system) பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E -mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பபடிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவித்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்படுகின்ற எந்த திருத்தமும் செல்லுபடியான திருத்தமாக கருதப்படமாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப் படிவங்கள் அறிவிக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

***கவனிக்க*** :

I. பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாதேனுமொரு நகரத்திற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை போதிய அளவில் இல்லாத போது இரண்டாம் விருப்பம் தெரிவித்த நகரத்திற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், அந்த இரண்டாம் நகரத்திற்கும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை போதிய அளவில் இல்லாத போது அண்மித்த நகருக்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். பரீட்சை நடாத்துகின்ற நகரம் பற்றிய இறுதித் தீர்மானம்பரீட்சை ஆணையாளர் நாயகத்தியால் மேற்கொள்ளப்படும்.

II. தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள முழுப் பெயருக்கு மாத்திரமே நியமனக்கடிதம் வழங்கப்படுவதனால் பெயரை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். நியமனம் வழங்குகின்ற சந்தர்ப்பத்தில் பெயரில் மாற்றம் செய்வதற்கு அல்லது யாதேனுமொரு பகுதியினை சேர்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

III. பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை இந்த அறிவித்தலின் 13(இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலையை உடைய ஒருவரின் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

IV. வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் தங்களுடைய விண்ணப்பங்களை அனுப்பியுள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய தினத்தன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் விண்ணப்பப் படிவத்தினை அனுப்பியுள்ள அனைவருக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்படல் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகைமை பெற்றுள்ளமைக்கான தகைமையாகக்

கொள்ளப்படாது. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பதாரர்களின் தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன், அதன் போது தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லையென தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்த நிலை நிராகரிக்கப்படும்.

13.0 **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரம் அனுப்பி வைத்தவுடன் அது பற்றி குறிப்பிட்டு பரீட்சை திணைக்களத்தினால் அறிவித்தல் ஒன்று செய்திப் பத்திரிகையில் அறிவிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்களின் பின்னரும் பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாவிடின் அது பற்றி பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) அதன் போது உங்களிடம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதியையும், பதிவுத் தபால் பற்றுச்சீட்டினையும் வைத்துக் கொண்டு பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றினைக் குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்திடம் வினவுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரர் ஒருவராயின் பெக்ஸ் மூலம் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உங்களது பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு அத்துடன் மேலே உங்களது விபரம் அடங்கிய கோரிக்கைக் கடிதமொன்றை பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பெக்ஸ் இலக்கத்திற்கு பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்து விசாரித்தல் மிகவும் பயனுடையதாக அமையும்.

(இ) பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும். யாதேனுமொரு நிறுவனம் ஒன்றின் ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் ஒருவர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவரின் மூலமும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/ ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர்,தமது பிரிவின் கிராம சேவை அலுவலர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்திய ஆணையாளர் ஒருவர்,சட்டத்தரணி ஒருவர், உத்தரவாதம் பெற்ற நொத்தாரிசு ஒருவர்,முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர்,அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தரமாக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பௌத்த விஹாரை ஒன்றின் விஹாராதிபதி அல்லது தலைமை பிக்கு ஒருவர் அல்லது ஏனைய மதத்தைச் சேர்ந்த வணக்கஸ்தலம் ஒன்றிற்குப் பொறுப்பான அல்லது மதத் தலைவர்களில் குறிப்பிடத்தக்க பதவி வகிக்கும் ஒருவர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். தமக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் சந்தர்ப்பத்திலேயே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட பரீட்சை அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு பரீட்சை அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி கிடைக்கப்பெற மாட்டாது.

14.0 விண்ணப்பதாரர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை.
(ii) செல்லுபடியான கடவுச் சீட்டு
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்

பரீட்சார்த்திகள் அவர்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதன் பொருட்டு அவர்களது முகம் மற்றும் காதுகளை மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு மறுப்பு தெரிவிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தது தொடக்கம் அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சார்த்தியை அடையாளம் காணும் வகையில் மேற்பார்வையாளருக்கு காணக்கூடியதாக முகத்தையும் காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்தினுள் இருத்தல் வேண்டும்.

15.0 விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் ஒன்றினை வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொண்டுள்ளதாகக் கருதக் கூடாது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகளுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். அந்த ஒழுங்கு விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு அவர் ஆளாக நேரிடும்.

16.0 இங்கு குறிப்பிடப்படாத வேறு யாதேனுமொரு விடயம் தொடர்பாக, சுகாதார அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

*17.0 இந்த சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில ஊடக அறிவித்தல்களுக்கிடையே யாதேனுமொரு வேறுபாடு இருப்பின், அதன் போது சிங்கள மொழி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*

வைத்தியர் எஸ். எச். முனசிங்ஹ,
செயலாளர்,
*சுகாதார அமைச்சு.*

*சுகாதார அமைச்சு,*
*"சுவசிறிபாய",*
இலக்கம் *385*, வண பத்தேகம விமலவன்ஷ தேரர் மாவத்தை,
கொழும்பு *10.*
*2021*, யூன் மாதம் *29* ஆந் திகதி.

**அட்டவணை** - I

**மாவட்டங்களின் பெயர் பட்டியல் மற்றும் இலக்கங்கள்**

| | | |
|---|---|---|
| 01. | கொழும்பு | 01 |
| 02. | கம்பஹா | 02 |
| 03. | களுத்துறை | 03 |
| 04. | கண்டி | 04 |
| 05. | மாத்தளை | 05 |
| 06. | நுவரெலியா | 06 |
| 07. | காலி | 07 |
| 08. | மாத்தறை | 08 |
| 09. | அம்பாந்தோட்டை | 09 |
| 10. | யாழ்ப்பாணம் | 10 |
| 11. | மன்னார் | 11 |
| 12. | வவுனியா | 12 |
| 13. | முல்லைத்தீவு | 13 |
| 14. | கிளிநொச்சி | 14 |
| 15. | மட்டக்களப்பு | 15 |
| 16. | அம்பாறை | 16 |
| 17. | திருகோணமலை | 17 |
| 18. | குருநாகல் | 18 |
| 19. | புத்தளம் | 19 |
| 20. | அநுராதபுரம் | 20 |
| 21. | பொலன்னறுவை | 21 |
| 22. | பதுளை | 22 |
| 23. | மொனராகலை | 23 |
| 24. | இரத்தினபுரி | 24 |
| 25. | கேகாலை | 25 |

**அட்டவணை** - II

**பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்கள்**

| | மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| 01. | கொழும்பு | கொட்டஹேனா | 01 |
| | | மருதானை | 02 |
| | | பொரளை | 03 |
| | | குருந்துவத்தை | 04 |
| | | பம்பலப்பிட்டி | 05 |
| | | ஹெவ்லொக் டவுன் | 06 |
| | | நுகேகொட | 07 |
| | | மொரட்டுவ | 08 |

| | மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| | | பிலியந்தல | 09 |
| | | மஹரகரம | 10 |
| | | ஹங்வெல்ல | 11 |
| | | அவிசாவலை | 12 |
| | | ஹோமாகம | 13 |
| 02. | கம்பஹா | நீர்கொழும்பு | 14 |
| | | மினுவாங்கொட | 15 |
| | | திவுலப்பிட்டி | 16 |
| | | வேயாங்கொட | 17 |
| | | கம்பஹா | 18 |
| | | ஜா – எல | 19 |
| | | வத்தளை | 20 |
| | | களணி | 21 |
| | | தொம்பே | 22 |
| 03. | களுத்துறை | ஹொரனை | 23 |
| | | பாணந்துறை | 24 |
| | | களுத்துறை | 25 |
| | | மத்துகம | 26 |
| | | அளுத்கம | 27 |
| 04. | கண்டி | கண்டி | 28 |
| | | கட்டுகஸ்தொட்ட | 29 |
| | | தெல்தெனிய | 30 |
| | | வத்தேகம | 31 |
| | | நுகவெல | 32 |
| | | கலகெதர | 33 |
| | | கம்பொல | 34 |
| 05. | மாத்தளை | மாத்தளை | 35 |
| | | கலேவல | 36 |
| | | நாவுல | 37 |
| | | லக்கல – பள்ளேகம | 38 |
| 06. | நுவரெலியா | ஹெதுனுவெவ | 39 |
| | | நுவரெலியா | 40 |
| | | வத்துமுல்ல | 41 |
| | | ஹட்டன் | 42 |
| | | கினிகத்ஹேன | 43 |
| 07. | காலி | அம்பலாங்கொட | 44 |
| | | காலி | 45 |
| | | பத்தேகம | 46 |
| 08. | மாத்தறை | வெலிகம | 47 |
| | | மாத்தறை | 48 |
| | | கம்புறுபிட்டி | 49 |
| | | ஹக்மன | 50 |
| | | தெய்யந்தர | 51 |
| | | திக்வெல்ல | 52 |
| | | அக்குரஸ்ஸ | 53 |
| | | கொட்டபொல | 54 |

| | மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| 09. | அம்பாந்தோட்டை | பெலியத்த | 55 |
| | | வலஸ்முல்ல | 56 |
| | | வீரகெட்டிய | 57 |
| | | தங்கல்ல | 58 |
| | | அம்பலாந்தோட்டை | 59 |
| | | அம்பாந்தோட்டை | 60 |
| | | திஸ்ஸமகாராம | 61 |
| 10. | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | 62 |
| | | யாழ்ப்பாணம் | 63 |
| | | தெல்லிப்பளை | 64 |
| | | பருத்தித்துறை | 65 |
| 11. | மன்னார் | மன்னார் | 66 |
| | | முருங்கன் | 67 |
| 12. | வவுனியா | வவுனியா | 68 |
| 13. | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | 69 |
| 14. | கிளிநொச்சி | கிளிநொச்சி | 70 |
| | | பளை | 71 |
| 15. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | 72 |
| | | ஏறாவூர் | 73 |
| | | காத்தான்குடி | 74 |
| 16. | அம்பாறை | அம்பாறை | 75 |
| | | சேரங்கட | 76 |
| | | கல்முனை | 77 |
| | | அக்கரைப்பற்று | 78 |
| | | சம்மாந்துறை | 79 |
| 17. | திருகோணமலை | கந்தளாய் | 80 |
| | | திருகோணமலை | 81 |
| | | மூதூர் | 82 |
| | | பதவி பராக்கிரமபுர | 83 |
| | | கிண்ணியா | 84 |
| 18. | குருநாகல் | குளியாப்பிட்டி | 85 |
| | | பிங்கிரிய | 86 |
| | | நாரம்மல | 87 |
| | | பொல்கஹவெல | 88 |
| | | குருநாகல் | 89 |
| | | இப்பாகமுவ | 90 |
| | | தொடங்கஸ்லந்த | 91 |
| | | மொரத்திஹ | 92 |
| | | நிக்கவெரட்டியா | 93 |
| | | மாகோ | 94 |
| 19. | புத்தளம் | வென்னப்புவ | 95 |
| | | மாதம்பே | 96 |
| | | சிலாபம் | 97 |
| | | புத்தளம் | 98 |

| | மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| 20. | அநுராதபுரம் | மதவாச்சி | 99 |
| | | கெக்கிராவ | 100 |
| | | அநுராதபுரம் | 101 |
| | | கலென்பிதுனுவெவ | 102 |
| | | கஹட்டகஸ்திகிலிய | 103 |
| 21. | பொலன்னறுவை | பொலன்னறுவை | 104 |
| | | ஹிங்குராக்கொட | 105 |
| 22. | பதுளை | பண்டாரவளை | 106 |
| | | வெலிகட | 107 |
| | | பதுளை | 108 |
| | | பசறை | 109 |
| | | மஹியங்கன | 110 |
| | | கிராந்துருகோட்டை | 111 |
| | | ஹசலக | 112 |
| 23. | மொனராகலை | பிபிலை | 113 |
| | | மொனராகலை | 114 |
| | | வெல்லவாய | 115 |
| 24. | இரத்தினபுரி | எஹலியகொட | 116 |
| | | இரத்தினபுரி | 117 |
| | | பெல்மடுல்ல | 118 |
| | | பலாங்கொட | 119 |
| | | கலவான | 120 |
| | | எம்பிலிபிட்டிய | 121 |
| 25. | கேகாலை | கேகாலை | 122 |
| | | ரம்புக்கன | 123 |
| | | மாவனெல்ல | 124 |
| | | ருவன்வெல்ல | 125 |

07-169

---

திருத்தம்

## முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சார்) வகுதி - 03 சேவைத் தொகையில் செய்து காட்டுநர் (திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021

மேற்கூறப்பட்ட ஆட்சேர்ப்பு சம்பந்தமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2228 ஆம் இலக்க மற்றும் 2021, மே மாதம் 13 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

02. இதன்படி தற்போதுள்ள கோவிட் தொற்று நோய் சூழ்நிலை காரணமாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2021.07.15 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

03. வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிற நிபந்தனைகள் மாறாது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எஸ். சீ. ஜகத்,
பணிப்பாளர் நாயகம்.

07-189

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால்செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2021**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 02.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.06.2021 |
| | | வெள்ளி | 09.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.06.2021 |
| | | வெள்ளி | 16.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.07.2021 |
| | | வியாழன் | 22.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.07.2021 |
| | | வெள்ளி | 30.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.07.2021 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 06.08.2021 | .. | நண்பகல் 12 | வியாழன் | 22.07.2021 |
| | | வெள்ளி | 13.08.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.07.2021 |
| | | வெள்ளி | 20.08.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.08.2021 |
| | | வெள்ளி | 27.08.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.08.2021 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 03.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.08.2021 |
| | | வெள்ளி | 10.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.08.2021 |
| | | வெள்ளி | 17.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.09.2021 |
| | | வெள்ளி | 24.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.09.2021 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.